நாமக்கல் - டிரினிடி மகளிர் கல்லூரியில் பெண்மை வெல்க என்ற தலைப்பிலான கருத்தரங்கு

நாமக்கல் - டிரினிடி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழாய்வுத் துறையின் சார்பில் "பெண்மை வெல்க" என்ற தலைப்பிலான கருத்தரங்கு 15.12.2022 அன்று கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

மகாகவி பாரதியார் பிறந்த தினத்தை முன்னிட்டு நடைபெற்ற இந்நிகழ்வினை கல்லூரித் தலைவர் பி. எஸ். கே. செங்கோடன் துவக்கி வைத்தார்.

செயலர் கே. நல்லுசாமி தலைமை தாங்கினார். செயல் இயக்குநர் அருணா செல்வராஜ் முன்னிலை வகித்தார். முதல்வர் எம். ஆர். லட்சுமிநாராயணன் வரவேற்புரை வழங்கினார். இயக்குநர் - உயர்கல்வி அரசுபரமேசுவரன் சிறப்பு அழைப்பாளரை அறிமுகப்படுத்தினார்.

சிறப்பு விருந்தினராக தமிழக அரசின் மேற்கு (கோவை) மண்டலக் காவல் துறைத்தலைவர் (ஓய்வு) அ. பாரி கலந்து கொண்டார்.

பாரதியார் பெண் உரிமை மற்றும் பெண் விடுதலை பற்றி கவிபாடவும், பாடுபடவும் சுவாமி விவேகானந்தரின் பெண் சீடரான மார்கரெட் எலிசபெத் என்னும் நிவேதிதா தான் முக்கிய காரணம். பாரதியின் கவிதையான நிமிர்ந்த நன்னடை, நேர் கொண்ட பார்வை தற்போதைய மகளிர்க்கு மிகவும் தேவையாக இருக்கிறது. தலைமைப் பதவிக்கு ஒரு பெண் வரவேண்டும் என்றால் பல சோதனைகளை தாண்டி தான் வரவேண்டியுள்ளது. சிறந்த மேடைப்பேச்சு என்பது தலைமைப்பண்புகளில் ஒன்றாக திகழ்கிறது. ஒரு நாடு மேன்மை அடைய வேண்டுமென்றால் அதற்கு மகளிர் கல்வி மிக அவசியம். நம் நாட்டில் மகளிர் உயர்கல்வி கற்பதால் தான் நம் நாடு வளர்ச்சியடைந்த நாடாக உருவெடுத்துள்ளது. மாணவிகள் நிறைய படிக்க வேண்டும். சமயோஜித புத்தி என்பது எப்போதும் பெண்களின் நல்ல தலைமைக்கு பயனுள்ளதாகவே அமையும். பெண்கள் வீட்டில் கடினமாக உழைப்பதால் தான் குடும்பம் என்ற உறவு நம் நாட்டில் சிதறாமல் மிகச்சிறப்பாக இருக்கிறது. மாணவியரே தாய் தந்தையரை மிகவும் நேசியுங்கள். நீங்கள் உயர்வதற்கு அவர்களே ஏணிப்படிகள். அவர்களை என்றும் நாம் மறக்கக் கூடாது. பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக, பாரதிதாசன் கண்ட புரட்சிப் பெண்ணாக நீங்கள் உருவாக வேண்டும். அப்போது தான் நீங்கள் புதுமையினை படைத்து இந்த சமுதாயத்தில் மிகவும் சிறந்து விளங்க முடியும் என்றார்.

இந்நிகழ்வில் தமிழத்துறைப் பேராசிரியப் பெருமக்கள் டி. கே. அனுராதா, ஆர். சாவித்திரி, எஸ். ஜெயமதி, ஏ. லதா, ஜெ. பாரதி, பி. விஷ்ணுப்ரியா, சி. கோபியா, பி. பிரதீபா, ஆர்.ஏ. அனிதா, எஸ். ஹேமலதா, கே. பாரதி உட்பட துறைத்தலைவர்கள், பேராசிரியப் பெருமக்கள் மற்றும் 1200-க்கும் மேற்பட்ட மாணவியர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் மாணவியர் பாரதியார் வேடமிட்டும், உணவு தானியங்களில் பாரதியார் சிலையினை செதுக்கியும் பார்வையாளர்களை மிக வெகுவாகக் கவர்ந்தனர்.

15/12/2022

Principal,
Trinity College for Women (Arts & Science),
Namakkal - 637 002.